# தேசியம்

THESIYAM ජේසියම්

www.thesiyamnews.com



சிறந்ததில் மிகச்சிறந்தது

OFFSET | DIGITAL | SCREEN PRINTING | CTCP PLATE MAKING | WEDDING CARDS

MATHI COLOURS

NO. 10, MURUGESAR LANE,
NALLUR, JAFFNA.
TEL : 021 222 9285
E-mail : mathicolours@gmail.com

CUSTOMER CARE
+94 77 722 2259



குரல் - 60 | 19.05.2023 (வெள்ளிக்கிழமை) | வைகாசி மாதம் | பக்கங்கள் 8 | ஊக்குவிப்பு : ரூ.30.00




பக்கம் 6

# உறவுகளின் கண்ணீரில் கரைந்த முள்ளிவாய்க்கால் மண்

## நானும் சிறீதரனும் எப்போதும் பிரியமாட்டோம் முள்ளிவாய்க்காலில் சுமந்திரன்!



பக்கம் 5

யார் தலைவராகினாலும் நானும் சிறீதரனும் ஒன்றாகவே பயணிப்போம் என இலங்கை தமிழரசு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் முள்ளிவாய்க்காலில் வைத்து தெரிவித்துள்ளார். நேற்று 14ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு காலை 10:30 மணியளவில் முள்ளிவாய்க்கால் நினைவாலயத்தில் இடம்பெற்றிருந்தது. நினைவேந்தல் நிகழ்வில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன், சிறீதரன் ஆகியோர் நினைவேந்தல் நிகழ்வினை



பக்கம் 5

## சிறிதரன், சுமந்திரன் என்னுடன் சேர்ந்திருப்பது பெருமையெனில் வந்து இணையுங்கள்

### விக்னேஸ்வரன் பதிலடி


இலங்கை தமிழ் அரசு கட்சியுடன் தான் இணைந்து செயற்பட போவதாக இலங்கை தமிழ் அரசு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சி.சிறிதரன், எம்.ஏ.சுமந்திரனின் தகவலை, தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் க.வி.விக்னேஸ்வரன் மறுத்துள்ளார்.



பக்கம் 7

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் : சர்வதேசத்தை எழுச்சி கொள்ள செய்த தமிழ் தேசிய பண்பாட்டுப் பேரவை!!!

## தமிழர் பகுதியில் நில அபகரிப்பை மேற்கொள்ள மற்றுமொரு புதிய திட்டம்



பக்கம் 5

மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையின் “ஜே“ வலயத்தினுள் முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் மற்றும் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவுகளும் மன்னார் மாவட்டத்தின் மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவும் உள்வாங்கப்பட்டுள்ளதாக கடந்த வாரம் உத்தியோகபூர்வமாக பிரதேச செயலகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## சர்வதேச விசாரணை மேற்கொள்ளப்பட்டு தமிழ் தேசம் அங்கீகரிக்கப்பட வேண்டும்!

### த.தே.ம.மு. தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ்



பக்கம் 5

ஆங்கிலேயர் இந்த நாட்டை சிங்கள தேசத்திடம் கையளித்து 75 வருடங்களாக ஒற்றையாட்சி அரசியல் அமைப்பின் கீழே தமிழர்களை அடக்கும் முகமாக சிங்கள பேரினவாத அரசாங்கம்

## கிளிநொச்சியில் தொல்லியல் சின்னங்களை அடையாளப்படுத்தும் முயற்சி..!

### பொதுமக்கள், அரசியல்வாதிகள் ஒன்று திரண்டு எதிர்ப்பு





பக்கம் 5

கிளிநொச்சி உருத்திரபுரம் உருத்திரபுரீஸ்வரர் ஆலயம் அமைந்துள்ள காணியில் தொல்லியல் சின்னங்கள் அடையாளப்படுத்தப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்த நிலையில், அதற்கு எதிராக பிரதேச மக்கள் மற்றும் அரசியல்வாதிகள் சிலர் நேற்று ஒன்று திரண்டு எதிரடப் வெளியிட்டிருந்தனர்.

எனினும் தொல்லியல் திணைக்கள் அதிகாரிகள் குறித்த பணிகளுக்கு செல்லவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

## தமிழர் கட்சியின் ஏற்பாட்டில் தனுஷ்கோடியில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு முன்னெடுப்பு..!



மே 18 முள்ளிவாய்க்கால் தமிழின படுகொலை அழிப்பு நாளில் சிங்கள் காடையர்களால் இரக்கமின்றி கொல்லப்பட்ட தலைவர் பிரபாகரனின் மகன் பாலச்சந்திரனின் தனுஷ்கோடி அரிச்சல்முனையில் புகைப்படம் கடலில் விடப்பட்ட சம்பவம் ஈழத்தமிழர்களின் நெஞ்சங்களை நெகிழவைத்துள்ளது.

தாயகத்தில் மட்டுமல்லாது புலம் பெயர் தேசங்களிலும் அனுஸ்டிகப்பட்டு வருகின்றது. இந்நிலையில் முள்ளிவாய்க்கால் தமிழின படுகொலை நினைவேந்தலையொட்டி தனுஷ்கோடி அரிச்சல்முனையில் தமிழர் கட்சி சார்பிலும் நினைவேந்தப்பட்டது.

ஈழத் தமிழர்களை கொத்து கொத்தாக முள்ளிவாய்க்காலில் கொன்று குவிக்கப்பட்டமை இலங்கையை கடந்து சர்வதேசத்திலும் பெரும் அதிர்ச்சியையும் துயரத்தையும் ஏற்படுத்தியிருந்தது.

ஆண்டுதோறும் உலக தமிழர்கள் மற்றும் இலங்கையில் உள்ள ஈழத்தமிழர்களால் மே 18ஆம் தேதி முள்ளிவாய்க்கால் நினைவு தினம் அனுசரிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் தமிழர் கட்சி சார்பில் அக்கட்சியின் மாநில செயலாளர் தீரன் திருமுருகன் தலைமையில் குழந்தைகள் உட்பட ஏராளமானோர் தனுஷ்கோடி அரிச்சல்முனை பகுதியில் விடுதலைப்புலிகள் இயக்க தலைவர் பிரபாகரனின் இளைய மகன் பாலச்சந்திரனின் உருவப்புகைப்படத்தை தெர்மாகோல் மூலம் உருவாக்கப்பட்ட படகில் வைத்து கடலில் விடப்பட்ட பின்னர் கடலில் மலர் தூவி அஞ்சலி செலுத்தியுள்ளமை நெகிழ்ச்சியினை ஏற்படுத்தியுள்ளது.

அத்துடன் இதன்போது முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த ஈழத்தமிழர் நினைவாக கோஷங்கள் எழுப்பி, ராஜபக்சவுக்கு எதிராகவும் கோஷங்களை எழுப்பி தங்களுடைய கண்டனத்தையும் பதிவு செய்திருந்தனர்.

## யாழ் பல்கலையில் உணர்வுபூர்வமாக இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் 14ம் ஆண்டு நினைவேந்தல் தமிழர் தாயகத்தில் நினவுகூரப்பட்டு வரும் நிலையில், யாழ்.பல்கலைக்கழகத்தில் உள்ள முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் உணர்வு பூர்வமாக முள்ளிவாய்க்கால் படுகொலை நினைவேந்தல் இடம் பெற்றுள்ளது.

இதன்போது பொதுச்சுடரினை யாழ். பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் ரகுராம் ஏற்றினார். இதனையடுத்து தொடர்சியாக ஒரு நிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டதோடு மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

தொடர்ந்து முள்ளிவாய்க்கால் கஞ்சியும் வழங்கப்பட்டது. இதன்போது யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள், பேராசிரியர்கள், கலைப்பீட பீடாதிபதி எஸ் ரகுராம், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





## "தாலாட்டு கேட்டு வளர்ந்தவர்கள் அல்ல நாம் தாயின் மரண ஓலம் கேட்டு வளர்ந்தவர்கள்"

### யாழ். இந்துக்கல்லூரியில் கவனம் ஈர்த்த பதாகை



முள்ளிவாய்க்கால் இறுதி யுத்ததில் கொல்லப்பட்ட உறவுகளுக்கான 14 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் தமிழர் தாயகப்பகுதிகளில் மட்டுமல்லாது புலம் பெயர் தேசங்களிலும் நினைவேந்தப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் யாழ். இந்துக் கல்லூரியில் முள்ளிவாய்க்கால் படுகொலையை நினைவுகூர்ந்து பதாகை ஒன்று வாயிலில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

அதில் "தாலாட்டு கேட்டு வளர்ந்தவர்கள் அல்ல நாம், எம் தாயாரின் மரண ஓலங்களை கேட்டு வளர்ந்தவர்கள் நாம்" என குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிலையில் அந்த பதாகை பலரின் கவனத்தை ஈர்த்துள்ளது. .

## மதத்தால்தான் நாம் வேறாகலாம் ஆனால் மனிதத்தால்... நெகிழவைத்த இஸ்லாமிய சகோதரிகள்



மதத்தால்தான் நாம் வேறாகிறோம் ஆனால் இனத்தால் மனிதத்தால் நாம் தமிழர்கள்தான் என இஸ்லாமிய சகோதரிகள் முள்ளிவாய்க்கால் கஞ்சி கொடுத்த நிகவும் பல்லரையும் நெகிழவைத்துள்ளது.

திருகோணமலை மூதூரில் வாழும் இஸ்லாமியசகோதரிகளே இவ்வாறு முள்ளிவாய்க்கால் கஞ்சியை மக்களுக்கு வழங்கியுள்ளனர்.

அதேவேளை முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை திருகோணமையில் அனுஸ்டிக்க நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

இந்நிலையில், இஸ்லாமிய சகோதரிகள் மதம்தாண்டி மனிதநேயத்துடன் , தமிழின படுகொலை நினைவேந்தலை அனுஸ்டித்ததுடன் முள்ளிவாய்க்கால் கஞ்சியையும் பகிந்தளித்துள்ளனர்.





## மன்னாரில் உணர்வுபூர்வமாக இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள்



தமிழின அழிப்பு நாளான முள்ளி வாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று (18) உணர்வு பூர்வமாக தமிழ் பிரதேசங்களில் அனுஷ்டிக்கப்பட்டு வரு கின்ற நிலையில் மன்னாரிலும் அனுஷ் டிக்கப்பட்டது. நேற்று வியாழக்கிழமை காலை 8 மணியளவில் தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் மன்னார் பஜார் பகுதியில் அனுஷ்டிக்கப் பட்டது.

இதன் போது முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது. நிகழ்விலதமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில் இடம் பெற்ற குறித்த மத தலைவர்கள் மக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

மேலும் இறுதி யுத்தத்தில் முள்ளிவாய்க்காலில் உயிர் நீத்த மக்களை நினைவு கூர்ந்து சுடர் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.



# கொழும்பில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு இடையூறு பொலிஸார் குவிப்பு









கொழும்பு - பொரளையில் ஏற்பாடு செய்யப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வினை சீர்குலைக்க ஒரு குழு முயற்சித்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு கிழக்கில் இடம்பெறும் நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு ஆதரவை வெளிப்படுத்தும் வகையில் இந்நிகழ்வு நேற்று இடம்பெற்றுவருகின்றது.

முள்ளிவாய்க்கால் நிகழ்வு அமைதியான முறையில் முன்னெடுக்கப்பட்ட நிலையில், மற்றுமொரு குழுவினர் பதாதைகளை ஏந்தியவாறு நினைவேந்தலில் ஈடுபட்டவர்களை குழப்பும் முகமாக செயற்பட்டனர்.

பொரளை சுற்றுவட்டத்தில் இடம்பெறும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுக்கு ஒரு சில தரப்பினர் இடையூறு விளைவித்து வருகின்றனர்.

இதன் போது 'புலிகளின் நினைவேந்தல் வேண்டாம்' என்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு சிலர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து அங்கு பதற்ற நிலை அதிகரித்த நிலையில், பொலிஸார் குவிக்கப்பட்டனர்.

வடக்குகிழக்கில் இடம்பெறும் நினைவேந்தல் நிகழ்வுகளிற்கான ஆதரவை வெளிப்படுத்தும் விதத்தில் கொழும்பில் முள்ளிவாய்க்கால் நிகழ்வுகள் இடம்பெற்றதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்திருந்தனர். இந்நிலையில் அங்கு ஏற்பட்ட குழப்பநிலை காரணமாக பொரளை சுற்றுவட்டத்திற்கு அருகில் கலகம் அடக்கும் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது.

# முள்ளிவாய்க்கால் கடற்கரையில்

## பிதிர்கடன் ஆத்ம சாந்தி பூசை



முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களுக்கு முள்ளிவாய்க்கால் கடற்கரையில் ஆத்ம சாந்தி பூசை நடத்தப்பட்டது.

அகில இலங்கை சைவத்தமிழ் மன்றத்தின் மதகுருக்களால் முள்ளிவாய்க்கால் தமிழ் இனப்படுகொலை யுத்தத்தில் உயிரிழந்தவர்களுக்கு முள்ளிவாய்க்கால் கடற்கரையில் (கப்பலடியில்) பிதிர்கடன் ஆத்ம சாந்தி பூசை இடம்பெற்றது.

இதன்போது இறுதி போரில் உயிரிழந்த மக்களின் ஆத்மா சாந்தி வேண்டி பிதிர்கடன் எனப்படும் நீர்த்தார் சடங்கினை கப்பலடி கடற்கரையில் அச்சகர்களால் நடத்தப்பட்டுள்ளது.

இதில் மபெருமளவானோர் கலந்து கொண்டு உயிரிழந்த தங்கள் உறவுகளுக்கான ஆத்மா சாந்தி சடங்கினை மேற்கொண்டு முள்ளிவாய்க்கால் கப்பலடி கடலில் கரைக்கும் சம்பிரதாயங்களையும் மேற்கொண்டுள்ளார்கள்.

# யாழ் மாவட்ட ரெலோ காரியாலத்தில் 14ம் ஆண்டு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு!



யாழ் மாவட்ட ரெலோ காரியாலத்தில் 14 ஆண்டு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நேற்று 18.05.2023 மதியம் நடைபெற்றது.

பொதுச் சுடரினை ரெலோ இளைஞர் அணித் தலைவரும் முன்னாள் மாகாணசபை உறுப்பினரும் இறுதி யுத்தத்தின் நேரடிச் சாட்சியமும் ஆன சபா குகதாஸ் அவர்கள் ஏற்றி வைத்தார் பின்னர் அகவணக்கம் மலர் அஞ்சலி நினைவேந்தல் உரை என்பன இடம் பெற்றன. கட்சி உறுப்பினர்களும் கலந்து கொண்டனர் .

சபா குகதாஸ் அவர்கள் தனது உரையில் பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கு சர்வதேச நீதியே வேண்டும் என்றும் உள்ளக பொறிமுறைகள் தோல்வியடைந்ததுடன் பாதிக்கப்பட்ட மக்களும் அதனை நிராகரித்து விட்டனர் என்றும் தமிழின அழிப்பு நடந்தது என்பதை சர்வதேசம் ஏற்று அங்கிகரிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்

# யாழில் முள்ளிவாய்க்கால் கஞ்சியை ஆசையுடன் அருந்திய சிறுவர்கள்!



யாழ்ப்பாணம் - குருநகர் பகுதியில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை கஞ்சி வழங்கி அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பாடசாலை சிறுவர்கள் என ஏராளமானோர் முள்ளிவாய்க்கால் கஞ்சியை அருந்திச் சென்றமையைக் காண முடிந்தது.

தாயக நினைவேந்தல் அமைப்பின் ஏற்பாட்டில் தமிழ் இனப்படுகொலைக்கு நீதி கோரியும் இனப்படுகொலையை இளஞ் சந்ததியினருக்கு கொண்டு சேர்க்கும் வகையிலும் முல்லைத்தீவில் இருந்து முள்ளிவாய்க்கால் தமிழ் இனப்படுகொலை நினைவு படங்கள் தாங்கிய ஊர்திப் பவனி தமிழர் பகுதியெங்கும் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில்

# மன்னாரில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு..!



முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று (18) தமிழர் தாயகத்தின் பல்வேறு பகுதிகளிலும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் தமிழின படுகொலை வாரத்தை முன்னிட்டு இனப் படுகொலைக்கு நீதி கோரியும், முள்ளிவாய்க்கால் நினைவுகளை சுமந்தும் தமிழர் தாயகப் பகுதிகளில் தமிழ் இனப்படுகொலை குறித்து பல்வேறு நினைவேந்தல்கள் இடம் பெற்று வரும் நிலையில், வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் வடக்கு கிழக்கில் உள்ள 8 மாவட்டங்களில் நேற்றைய தினம்(18) முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இடம் பெற்றது.

இந்த நிலையில் மன்னார் மாவட்டத்தில் வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் மெசிடோ நிறுவனத்தின் அனுசரணையில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு முன் தமிழின படுகொலை அஞ்சலி நிகழ்வுடன் முள்ளிவாய்க்கால் கஞ்சியும் வழங்கி வைக்கப்பட்டது

அஞ்சலி ஏற்பாடு செய்யப்பட்ட பகுதிகளில் தமிழின படுகொலை நினைவு நாள் மே-18 எனும் தொனிப்பொருளில் பதாகை காட்சிப்படுத்தப்பட்டு வெள்ளைக்கொடி மற்றும் வெள்ளை நிற தோரணங்கள் பறக்கவிடப்பட்டுள்ளது.

இதன் போது முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த மக்களை நினைவு கூர்ந்து சுடர் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

குறித்த நினைவேந்தல் மற்றும் கஞ்சி வழுங்கும் நிகழ்வில் மெசிடோ நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ மற்றும் மெசிடோ நிறுவன பணியாளர்கள் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.



தேசியம்

# முள்ளிவாய்க்காலில் பலரையும் மெய்சிலிர்க்க வைத்த பாலச்சந்திரனின் நினைவுகள்



இலங்கையில் யுத்தம் முடிந்து 14 வருடங்கள் கடந்த நிலையில், நேற்று மக்களின் கண்ணீரில் நனைந்தது முள்ளிவாய்க்கால்.

பல உயிர்களின் இரத்த கரைகள் படிந்த முள்ளிவாய்க்கால் மண்ணில், தமது உறவுகளை தமிழ் மக்கள் நினைவு கூர்ந்த வண்ணம் உள்ளனர். இறந்த உறவுகளின் நினைவில் கரைந்த மக்களை நேற்று முள்ளிவாய்க்காலில் நிகழ்ந்த சம்பவம் ஒன்று மெய்சிலிர்க்க வைத்துள்ளது. 2009 ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தின் போது, விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனின் 12 வயது மகன் பாலச்சந்திரன் மிகக் கொடூரமான முறையில் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பாலச்சந்திரன் இறந்து கிடந்த காட்சியும் அவரின் அப்பாவிதனமான இறுதி தருணங்களும் என்றும் தமிழரின் நெஞ்சில் நிறைந்திருக்கும். அப்படியிருக்கையில் நேற்று முள்ளிவாய்க்காலில் பாலசந்திரனின் இறுதி தருணங்களை ஒரு சிறுவன் மீண்டும் நினைவுப்படுத்தியுள்ளார். பாலச்சந்திரனை போன்று உடையணிந்து, அவர் இறுதியாக அமர்ந்திருந்ததை போன்று ஒரு இடத்தில் அமர்ந்து இருந் தார்.

இந்த காட்சி அப்படியே பாலச்சந்திரனை பிரதிபலிப்பதாக இருந்தமையால் அங்கிருந்த மக்கள் அனைவரும் அந்த சிறுவனை பார்த்து, மெய்சிலிர்த்து போனதுடன் பலர் கண்ணீர் சிந்தியுள்ளனர்.

# கிளிநொச்சி மாவட்ட மக்கள் அமைப்பின் நினைவஞ்சலி



கிளிநொச்சி மாவட்ட மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. குறித்த நிகழ்வில் நூற்றுக்கணக்கான மக்கள் திரண்டு அஞ்சலி செலுத்தினர்.

முள்ளிவாய்க்கால் பகுதியிலும், ஏனைய சம்பவங்களிலும் உயிரிழந்த அத்தனை உயிர்களிற்கும் வணக்கம் செலுத்தும் குறித்த நிகழ்வு நேற்று பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்றது. நிகழ்வில் சைவ, கிறிஸ்தவ, இஸ்லாமிய, பௌத்த மத வழிபாடுகள் இடம்பெற்றது.

தொடர்ந்து சர்வ மத தலைவர்கள் பொதுச்சுடரை ஏற்றினர. தொடர்ந்து அனைத்து மதங்களையும் உள்ளடக்கி சிறுவர்கள் சுடரினை ஏற்றினர். அதன் பின்னர் கூடியிருந்த மக்கள் ஈகைச்சுடர்களை ஏற்றி உயிரிழந்த அனைவருக்குமாக கண்ணீருடன் மலர் அஞ்சலி செலுத்தினர். இந்நிகழ்வில் தமிழ், சிங்கள, இஸ்லாமிய மக்களும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

குறித்த நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் முள்ளிவாய்க்கால் நினைவாக மரக்கன்றுகளையும் பெற்று சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தால் முள்ளிவாய்க்கால் கஞ்சி வார்ப்பு



முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் இறுதி நாளான நேற்று வியாழக்கிழமை (18.05.2023) தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தினால் அதன் தலைமைப் பணிமனையில் முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சி பகிர்ந்தளிக்கப்பட்டது.

போரில் புதுமாத்தளனில் தனது கணவனைப் பலிகொடுத்த திருமதி தக்சாயினி அருள்நேசநாதன் நினைவுத்தீபம் ஏற்றி வைக்க, போரில் கொல்லப்பட்டவர்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல் இடம்பெற்றது.

இக்கஞ்சி வழங்கல் நிகழ்ச்சியில் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன், பொதுச்செயலாளர் ம. கஜேந்திரன், துணைப் பொதுச்செயலாளர் சண்.தயாளன், பொருளாளர் க. கேதீஸ்வரநாதன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர். வீதியால் பயணித்தோர் மற்றும் பாடசாலை மாணவர்கள் என நூற்று க்கணக்கானோர் முள்ளிவாய்க்கால் கஞ்சியை உணர்வுடன் வாங்கி அருந்திச்சென்றனர்.

2009ஆம் ஆண்டு இறுதிப்போரில் முள்ளிவாய்க்காலில் மேற்கொள்ளப்பட்ட தமிழ் இனவழிப்பை நினைவுகூரும் முகமாக மே 12 தொடங்கி 18 வரையான நாட்கள் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரமாகத் தமிழ் மக்களால் உணர்வெழுச்சியுடன் கடைப்பிடிக்கப்படுகிறது. இந்நாட்களில், போரின் இறுதிக்காலத்தில் முற்றுகைக்குள் ஆளாகியிருந்த தமிழ் மக்களின் ஒரேயொரு உயிர்காப்பு ஆகாரமாக விளங்கிய கஞ்சி முள்ளிவாய்க்கால் கஞ்சி என்ற பெயரில் வழங்கப்பட்டு வருகிறது.

போர்க்காலத்தில் தமிழ் மக்கள் பட்ட வதைகளை நினைவிற்கொள்ளும் முகமாகவும், பட்ட வலிகளை அடுத்த தலைமுறைக்குக் கடத்திச் செல்லும் விதமாகவும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வார்ப்பு ஒரு குறியீடாக இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சமத்துவ கட்சியின்

## முள்ளிவாய்க்கால் நினைவஞ்சலி



முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் 2023 நிகழ்வுகள் கிளிநொச்சி சமத்துவக் கட்சியின் மாவட்ட அலுவலகத்தில் உணர்வுபூர்வமாக இடம்பெற்றது.

முன்னாள் அரசியல் துறை போராளியும், சமத்துவக் கட்சியின் மாவட்ட அமைப்பாளருமான வேங்கை தலைமையில் இடம்பெற்ற நினைவேந்தல் நிகழ்வில் பொதுச் சுடரினை கிளிநொச்சி வரத்தக சங்கத்தின் முன்னாள் தலைவர் இராமன் அவர்கள் ஏற்றி வைத்ததனை தொடர்ந்து இறுதி யுத்தத்தில் கொல்லப்பட்ட அனைவருக்கும் அகவணக்கம் செலுத்தப்பட்டது. தொடர்ந்து ஏனைய சுடர்களும் ஏற்ப்பட்டன. இதனை தொடர்ந்து மலர் அஞ்சலியினை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் அவர்கள் ஆரம்பித்து வைக்க ஏனையவர்களும் மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்கள்.

இதனை தொடர்ந்து முள்ளிவாய்க்கால் கஞ்சியும் வழங்கப்பட்டது.

# வவுனியாவில் நினைவஞ்சலி



# தமிழ் தேசிய இளைஞர் பேரவையின் முள்ளிவாய்க்கால் அஞ்சலி



தமிழ்த் தேசிய இளைஞர் பேரவையின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நேற்று கிளிநொச்சி பசுமைப் பூங்காவில் இடம்பெற்றது. குறித்த நிகழ்வு நேற்று பிற்பகல் 5 மணியளவில் ஆரம்பமானது.

பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் முற்றத்தில் இடம்பெற்ற நிகழ்வில் சைவ கிறிஸ்தவ மதகுருமார் கலந்து கொண்டு பொதுச்சுடரினை ஏற்றினர்.

தொடர்ந்து மெழுகுதிரி ஏந்தியவாறு மக்கள் அஞ்சலி செலுத்தினர். மத தலைவர்களினால் மலரஞ்சலி ஆரம்பிக்கப்பட்டு மலரஞ்சலியும் இடம்பெற்றது. தொடர்ந்து உயிரிழந்தவர்கள் நினைவாக மத பிரார்த்தனையும் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## நானும் சிறீதரனும் எப்போதும்...

முடித்துவிட்டு இருவரும் ஒன்றாக வெளியேறுவதை பார்த்துக் கொண்டிருந்த யாழ்ப்பாண மாநகர சபையின் முன்னாள் முதல்வர் வி, மணிவண்ணன், தமிழ் மக்கள் கூட்டணியின் உறுப்பினர் பேராசிரியர் சிவநாதன் உடன் நின்று கொண்டு நீங்கள் இருவரும் ஒன்றாகவே திரிகிறீர்கள் யார் தலைவராக போகிறீர்கள் என வினவினார்.

இந்நிலையில் இதற்கு பதிலளித்த எம்.ஏ.சுமந்திரன், யார் தலைவராகினாலும் ஒன்றாகவே பயணிப்போம். உங்களையும் எங்களுடன் வந்து சேருமாறு தானே கேட்டோம்.

சேர்ந்தால் உங்களிடம் தலைமையை தந்துவிட்டு நாங்கள் செயல்படலாம். உங்கள் கட்சியின் தலைவர் விக்னேஸ்வரன் ஐயா எங்களுடன் தானே வர போகின்றார் என புன்னகையுடன் கூறியுள்ளார்.

## சிறிதரன் சுமந்திரன் என்னுடன்...

விரும்பினால், அவர்கள் தமது கட்சியுடன் இணைந்து செயற்படலாமென்றும் கூறியுள்ளார்.

முள்ளிவாய்க்காலில் நேற்று அஞ்சலி நிகழ்வு நடந்த பின்னர், இலங்கை தமிழ் அரசு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்.ஏ. சுமந்திரன், சிறிதரன் மற்றும் தமிழ் மக்கள் கூட்டணியின் தேசிய அமைப்பாளர் வி.மணிவண்ணனுக்கு இடையிலான சுவாரஸ்ய உரையாடல் கவனம் பெற்றிருந்தது.

நினைவஞ்சலி நிறைவடைந்ததும் சி.சிறிதரன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் ஒன்றாக பேசியபடி வந்தனர். அங்கு தமிழ் மக்கள் கூட்டணியின் தேசிய அமைப்பாளர் வி.மணிவண்ணன் தரப்பினர் நின்றனர். சுமந்திரனும், சிறிதரனும் பேசிக்கொண்டு வந்தபோது, மணிவண்ணன் அவர்களிடம்- "நீங்கள் இருவரும் தலைமைப் பதவிக்கு பிரச்சினைப்பட்டு சண்டை பிடிப்பதாக சொல்கிறார்கள். நீங்கள் இருவரும் சிரித்துக் கதைத்துக் கொண்டு வருகிறீர்களே" என்றார்.

உடனே எம்.ஏ.சுமந்திரன், "யார் தலைவரானாலும் நாங்கள் ஒற்றுமையாகவே செயற்படுவோம். எங்களை யாரும் பிரிக்க முடியாது. நாம் ஒன்றாகத்தான் செயற்படுவோம்.

அதுதானே, உங்களிடம் தலைமையை தந்துவிட்டு ஒதுங்கலாம் என பார்த்தால், நீங்கள் ஐயாவுடன் (.க.வி.விக்னேஸ்வரன்) போய் நிற்கிறீர்கள்." என்றார்.

அப்பொழுது மணிவண்ணன், தமது கட்சியின் பிரமுகர் பேராசிரியர் சிவநாதனை சுட்டிக்காட்டி, "இங்கே சிவநாதன் சேரும் நிற்கிறார்" என்றார்.

உடனே சிறிதரன், "எல்லோரும் ஒன்றுதான். ஐயாவும் இனி எங்களுடன்தான் வரப்போகிறார்" என்றார்.

ஊடகம் ஒன்றிற்கு தொலைபேசியில் வழங்கிய கருத்து க.வி.விக்னேஸ்வரன் பதிலளிக்கையில், "அப்படி அவர்களுடன் இணைந்து செயற்படும் எந்த யோசனையும் இல்லை. கடந்த வாரம் ஜனாதிபதியுடனான சந்திப்பின் போதும், சுமந்திரன் எனக்கு பக்கத்தில்தான் உட்கார்ந்திருந்தார். நான் சொன்ன விடயங்களை ஆமோதித்து தலையசைத்தபடி, சிங்களத்தில் மொழிபெயர்த்துக் கொண்டிருந்தார்.

நாம் செய்யும் சில நல்ல, முக்கிய விடயங்களின் பெயரை, தாம் எடுப்பதற்காக இப்பொழுது அப்படி சொல்கிறார்களோ தெரியவில்லை. அவர்களின் கட்சியில் இணைய வேண்டிய எந்த தேவையும் எனக்கில்லை. என்னுடன் இணைந்து செயற்படுவது பெருமையெனில் அவர்கள் வந்து இணைந்து கொள்ளலாம்" என்றார்.

## தமிழர் பகுதியில் நில அபகரி...

மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையால் ஏற்கனவே "எல்" வலயத்தினுள் முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைபற்று மற்றும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த 34 கிராம அலுவலர் பிரிவுகள் உள்வாங்கப்பட்டுள்ளன.

அவற்றில் கரைதுறைபற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 8 கிராம அலுவலர் பிரிவுகளை உடனடியாக மகாவலி அபிவிருத்தி அதிகார சபைக்கு ஒப்படைக்குமாறு அழுத்தம் பிரயோகிக்கப்பட்டிருந்த நிலையில், தமிழ் அரசியல்வாதிகளின் தலையீட்டையடுத்து அது ஒத்திப்போடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் புதிதாக "ஜே" வலயம் உருவாக்கப்பட்டு அதனுள் முல்லைத்தீவின் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவிலிருந்து 15 கிராம அலுவலர் பிரிவுகள் உள்வாங்கப்படுவதாக கடந்த வாரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவு உள்வாங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டபோதும் அங்கு எத்தனை கிராம அலுவலர் பிரிவுகள் உள்வாங்கப்படுகின்றன எனத்தெரிவிக்கப்படவில்லை.

மேலும் இதே "ஜே" வலயத்தினுள் மன்னார் மாவட்டத்தின் மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவின் 15 கிராம அலுவலர் பிரிவுகள் உள்வாங்கப்பட்டுள்ளன.

மகாவலி "ஜே" வலயத்தினுள் உள்வாங்கப்பட்டுள்ள கிராமங்களிலுள்ள அரச மற்றும் தனியார் காணி விபரங்கள், வீதிகள், அங்குள்ள குளங்கள், வனவளத் திணைக்களம் மற்றும் வன உயிரிகள் திணைக்களத்துக்கு சொந்தமான காணிகள், முன்னெடுக்க திட்டமிடப்பட்ட அபிவிருத்திப் பணிகள் உட்பட அனைத்து விபரங்களையும் சமர்ப்பிக்குமாறு மகாவலி அபிவிருத்தி அதி காரசபையால் கடந்த 2ஆம் திகதி தனிச் சிங்கள மொழியில் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வடக்கில் ஏற்கனவே பல்வேறு அரச திணைக்களங்களாலும் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்கள் அபகரிக்கப்பட்டு சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையிலேயே மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை இந்த நகர்வை முன்னெடுத்துள்ளது.

## சர்வதேச விசாரணை மேற்...

செயற்பட்டு வருகின்றதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணி தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தெரிவித்துள்ளார்.

எனவே சமஷ்டி அடிப்படையிலான அரசியல் யாப்பை கொண்டுவரும் பட்சத்தில் தான் தமிழர்கள் நிம்மதியாக வாழ முடியம் என குறிப்பிட்டுள்ளார்.

மட்டக்களப்பு தமிழ் தேசிய முக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் வாகரை மாணிக்கக்கரை கடற்கரையில் நேற்று இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் இனப்படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்களை நினைவு கூர்ந்து சுடரேற்றி மௌன அஞ்சலி செலுத்திய பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை கூறியுள்ளார்.

மேலும் தெரிவிக்கையில், தமிழர்களை பொறுத்த மட்டிலே 75 வருடங்களாக தமிழர்களுக்கு எதிராக இருக்கும் அரசியல் அமைப்பு மாற்றப்பட வேண்டும். எங்கள் மீது இது வரை நடத்தப்பட்ட இனழிப்புக்காக சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும்.

அத்துடன் தமிழர்கள் மீது நடத்தப்பட்ட யுத்த குற்ற உள்ளகபொறி முறை ஊடாக நடத்தும் விசாரணை நிறுத்தப்பட வேண்டும்.

அதேபோன்று 1987 இந்திய இலங்கை ஒப்பந்தம் மூலம் கொண்டுவரப்பட்ட தமிழ் மக்களுக்கு எதிரான 13வது திருத்தசட்டம் திருத்தப்பட வேண்டும்.

அத்துடன் சர்வதேச விசாரணை மேற்கொள்ளப்பட்டு தமிழ் தேசம் சுயநிர்ணய உரிமை, இறைமை அங்கீகரிக்கப்பட வேண்டும். பயங்கரவாத சட்டம் மற்றும் புதிய பயங்கரவாத சட்டம் நீக்கப்பட வேண்டும். காணாமல் போனோருக்கான நீதி கிடைக்க சர்வதேச நீதி விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதற்கான பரிகாரம் கிடைக்க வேண்டும்.

எனவே இந்த தமிழ் மக்களை இந்த தீவிலே நிம்மதியாக வாழவைக்க கூடிய ஒரு சூழ்நிலை இந்தியாவுக்கு இருக்கின்றது. இருந்த போதும் இந்தியாவை பொறுத்தமட்டில் தங்களது நலநனை கருத்தில் கொள்ளாது எங்கள் மக்கள் நிம்மதியாக வாழக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தும் விதமாக இந்த நாடு அரசியல் அமைப்பை மாற்றி அமைக்க சிங்கள பேரினவாத அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

## கிளிநொச்சியில் தொல்லியல்...

கிளிநொச்சி உருத்திரபுரம் உருத்திரபுரீஸ்வரர் ஆலயம் அமைந்துள்ள காணியில் புராதன தொல்லியல் சின்னங்கள் அமைந்துள்ளதாக தெரிவித்து நேற்றயை தினம் குறித்த பகுதியில் ஆய்வுகளுக்காக தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் அங்க செல்லவுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்த நிலையில், கிராமக்கள், அரசியல் கட்சி சார்ந்தவர்கள் கிராம மட்ட அமைப்புகள் என பலர் நேற்று தமது எதிர்ப்பை வெளியிடும் வகையில் ஆலயத்திற்கு முன்பாக ஒன்று கூடியிருந்தனர்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், சமத்துவக் கட்சியின் செயலார் நாயகம் எம்.சந்திரகுமார் மற்றும் பொதுமக்கள் குடிசார் அமைப்புக்களும் தமது எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர்.

# அம்பாறை திருக்கோவிலில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

அம்பாறை திருக்கோவிலில் நேற்று நடைபெற்ற மே 18 தமிழர் இன அழிப்பு நாள் முள்ளிவாய்க்கால் படுகொலை நினைவேந்தலில் முன்னாள் காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கி வைக்கப்பட்டபோது




# மட்டக்களப்பு கிரானில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்




மட்டக்களப்பு கிரான் பிள்ளையார் ஆலய முன்றில் "கஞ்சி பரிமாறுவோம் முள்ளிவாய்க்கால் வலி சுமந்த கதை பகிர்வோம்" எனும் தலைப்பில் நேற்று வியாழக்கிழமை (18) முள்ளிவாய்க்கால் உயிர்நீத்தவர்களுக்கு சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தினர்.

தமிழரசு கட்சி கிரான் கிளை தலைவர் சி.சண்முகநாதன் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நினைவேந்தலில் ஆலய குரு, கட்சி உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் என பலர் கலந்து கொண்டு உயிர்நீத்தவர்களுக்கு ஆத்மசாந்திவேண்டி சுடர் ஏற்றி மௌன அஞ்சலி செலுத்திய பின்னர் கஞ்சி வழங்கி வைத்தனர்.

# வவுனியாவில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்




வவுனியாவில் முள்ளிவாய்க்கால் நினைவு தினம் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் நேற்று அனுஸ்டிக்கப்பட்டது.

போராட்டம் இடம்பெறும் பிரதான தபாலகத்திற்கு அருகாமையில் உள்ள கொட்டகைக்கு முன்பாக அமைதி வழி கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், பின்னர் மலர் தூவி மெழுகுதிரி ஏற்றியும் அஞ்சலி செலுத்தினர்.

முள்ளிவாய்கால் யுத்தத்தில் மரணித்த தமது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தியதுடன், காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளும் இதன்போது நீதி கோரியிருந்தனர்.

# உறவுகளின் கண்ணீரில் கரைந்த முள்ளிவாய்க்கால் மண்

14ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நேற்று வியாழக்கிழமை (18) முள்ளிவாய்க்கால் முற்றத்தில் உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்டது.

முள்ளிவாய்க்கால் பொதுக்கட்டமைப்பினரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த அஞ்சலி நிகழ்வு, சரியாக காலை 10.30மணிக்கு மணியோசை எழுப்பப்பட்டு நினைவேந்தல் நிகழ்வுகள் ஆரம்பமாகின. தொடர்ந்து உயிர்நீத்த உறவுகளுக்கு அக வணக்கம் செலுத்தப்பட்டு, அதனையடுத்து பொதுச்சுடரேற்றப்பட்டது. முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தத்தில் தனது குடும்பத்தில் 13 பேரை இழந்த மன்னாரைச் சேர்ந்த தாயார் ஒருவர் பொதுச்சுடரினை ஏற்றிவைத்தார். அதேவேளை சமநேரத்தில் ஏனைய சுடர்களும் ஏற்றப்பட்டு அஞ்சலிகள் மேற்கொள் ளப்பட்டன.

அதனைத் தொடர்ந்து முள்ளி வாய்க்கால் பிரகடனம் வாசிக்கப்பட்டது. தென்கைலாய ஆதீன குருமுதல்வர் அகத்தியர் அடிகளார் அவர்களால் முள்ளிவாய்க்கால் பிரகடனம் வாசிக்கப்பட்டது. அத்தோடு இந்த நினைவேந்தல் நிகழ்வுகளில் பங்கேற்ற உறவுகள் கதறி அழுது, கணணீர் சொரிந்து உணர்வெழுச்சியுடன் இந்த நினைவேந்தல் நிகழ்வுகளில் பங்கேற்றனர்.

இந்த நினைவேந்தல் நிகழ்வுகளில் அரசியல் தலைவர்கள், மதத் தலைவர்கள், யாழ் பல்கலைக்கழக மணவர் ஒன்றியத்தினர், முள்ளிவாய்கால் மண்ணில் உயிர் நீத்தவர்களுடைய உறவினர்கள் என பெருந்திரளானவர்களின் பங்குபற்றலுடன் உணர்வழுச்சியுடன் நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது.


















# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் : சர்வதேசத்தை எழுச்சி கொள்ள செய்த தமிழ் தேசிய பண்பாட்டுப் பேரவை!!!







மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் ஒன்றுகூடல் நிகழ்வும், பேரணியும் பிரான்ஸ் நகரில் உணர்வுபூர்வமாக மிகவும் எழுச்சியுடன் நடந்தேறியது.

இவ் நினைவேந்தல் நிகழ்வை சர்வதேசத்தில் இருக்கக்கூடிய தமிழ் பொதுக் கட்டமைப்புகள் சேர்ந்து முன்னேடுத்திருந்த நிலையில் தமிழ் தேசிய பண்பாட்டுப் பேரவையின் சர்வதேசக்கிளையினர் தனது பூரணமான பங்களிப்புக்களை ஆரம்பம் முதல் இறுதி வரை வழங்கியிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எழுச்சி பூர்வமாக நடைபெற்ற 14வது ஆண்டு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் ஈழத்தில் நடந்த முள்ளிவாய்க்கால் நிகழ்வைப் போலவே ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் நிகழ்வில் கலந்து கொண்டு சிங்கள பேரினவாதத்தால் படுகொலை செய்யப்பட்ட எம் உறவுகளுக்கு உணர்வுபூர்வமாக தங்களது அஞ்சலிகளை செலுத்தியிருந்தார்கள்.

மேலும் பல எழுச்சி பூர்வமான கலை நிகழ்வுகளும் இடம் பெற்றுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.





















## உலகத்தமிழர் வரலாற்று மைய வளாகத்தில் : முள்ளிவாய்க்கால் நினைவிடத்தில் நினைவேந்தல்!















இருபத்தொரம் நூற்றாண்டில் உலகமே பார்திருக்க ஓர் இனம் இனப்படுகொலை செய்யப்பட்டு, அடக்குமுறைக்கு உள்ளான அடையாளங்கள் அனைத்தும் சர்வதேசத்தினால் தடைசெய்யப்பட்ட ஆயுதங்களை பயன்படுத்தி வல்லாதிக்க சக்திகளின் கொடும் கரம் கொண்டு வஞ்சம் தீர்க்கப்பட்டு 14 ஆண்டுகள் கடந்தும், எம்மின உறவுகளின் உள்ளங்களில் என்றும் துயர்நிறைந்த அந்த கொடூர நாட்களின் வடுக்கள் என்றும் நெருப்பாக பற்றி எரிந்துகொண்டே இருக்கிறது

அது, ஓர் நாள் அவர்களின் இழப்பிற்கெல்லாம் நிச்சயமாக விடிவைப்பெற்றுத்தரும். முள்ளிவாய்க்காலின் இறுதி நாட்களில் கொத்துக்கொத்தாக தமிழ்மக்கள் இனப்படுகொலைசெய்யப்பட்ட நினைவு நாள் வழமை போல் இந்த ஆண்டும் உலகத் தமிழர் வரலாற்று மைய வாளகத்தில் அமைந்துள்ள முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் பெருமளவான பொது மக்கள் கலந்து கொள்ள உணர்வெழுச்சியுடன் கடைப்பிடிக்கப்பட்டது.

நிகழ்வின் ஆரம்பத்தில் பொது ஈகைச்சுடரினை அற்புதவிநாயகர் ஆலய குருக்கள் பிரம்மசிறி சதீஸ்வர சர்மா, நாடுகடந்த அரசாங்க பிரதிநிதி செல்வி சாமினி இராமநாதன், இளையோர்களான செல்வன் சோதிதாஸ் மதி,மற்றும் செல்வி.பேரின்பநாதன் சஞ்சிகா, முள்ளிவாய்க்கால் இறுதிச்சமரில் வீரச்சாவடைந்த பிரிகேடியர் ஜெயம் அவர்களின் மகன் செல்வன் ஆரகன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து பிரித்தானியா கொடியினை உலகத்தமிழர் வரலாற்று மையத்தின் ஆலொசகர் பாலகிருஸ்ணன் (பாலா மாஸ்ரர்) ஏற்றி வைக்க, ஆயிரம் ஆயிரம் மாவீரர்களின் செங்குருதியால் தமிழர்களின் அடையாளமாக பட்டொளிவீசிப்பறந்த தமிழீழத்தேசியக் கொடியினை முன்னாள் போராளி கபில் ஏற்றிவைத்தார்.

நிகழ்வின் தொடர்ச்சியாக, அகவணக்கம் செலுத்த, முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை என அடையாளப்படுத்தப்பட்ட பல்லாயிரக்கணக்கான தமிழ்மக்கள் இனப்படுகொலை செய்யப்பட்டமை நினைவாக ஏற்றி வைக்கப்படும் ”இனப்படுகொலையின் பிரதான சுடரினை” இன அழிப்பினை அடையாளப்படுத்தும் இசை ஒலிக்க, பிரிகேடியர் ஆதவன் அவர்களின் துணைவியார் திருமதி சுதா அவர்கள் ஏற்றிவைக்க, சமநேரத்தில் நிகழ்வில் கலந்துகொண்ட அனைவரும் தமது உறவுகளை நினைவில் நிறுத்தி ஒழுங்குபடுத்தப்பட்ட சுடர்களை மன முருகி கண்களில் கண்ணீர் சொரிய ஏற்றி வைத்து ஆத்மார்த்தமாக வணக்கம் செலுத்தினர்.

மேலும் முள்ளிவாய்கால் இனப்படுகொலையின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள நினைவுத்ததூபிக்கு சுடர் ஏற்றி மலர்வணக்கம் செய்து ஆரம்பித்து வைக்க, நிகழ்வில் கலந்துகொண்ட அனைவரும் சுடர்களை ஏற்றி, மலர்வணக்கம் செலுத்தியதை தொடர்ந்து முள்ளிவாய்க்காலில் இனப்படுகொலை செய்யப்பட்டவர்களின் ஆத்ம சாந்திக்கான இறையாசிவேண்டிய உரையினை ஒக்ஸ்பேட் அற்புத விநாயகர் ஆலய குருக்கள் பிரம்மசிறி சதீஸ்வரசர்மா நிகழ்த்தினார்.

தொடரந்து இனப்படுகொலை நினைவுரைகளை தொழிற்கட்சியின் தமிழ்ப்பிரதிநிதி சென் கந்தையா(ஆங்கில மொழியில்) உலகத் தமிழர்வரலாற்று மைய அறங்காவலர் அவை உறுப்பினர் நிலக்சன் ஆற்றினார்கள்.

தொடர்ந்து இறுதிக்களம்வரை களமாடிய முன்னாள் போராளியும் தமிழீழ அரசிற்துறைப்பொறுப்பாளருமான ஜெயாத்தன் அவர்களும் நிகழ்த்தியதை தொடர்ந்து இனப்படுகொலையின நினைவுச் சிறப்புரையினை முன்னாள் போராளியும் உலகத் தமிழர் வரலாற்று மைய செயற்பாட்டளருமான சங்கீதன் அவர்கள் நிகழ்த்தினார்.

தொர்ந்து கடந்த காலங்களில் இதே மாதத்தில் வீரச்சாவடைந்த மாவீரர்கள் நினைவாகவும் குறிப்பாக முள்ளிவாய்க்கால் இறுதிச்சமரில் வீரச்சாவடைந்த மாவீரர்கள் நினைவாகவும் மாவீரர் மண்டபத்தில் நிலைப்படுத்தப்பட்டிருந்த மாவீரர்கள் திருவுருவப்படங்களுக்கு அனைவரும் சுடர் ஏற்றி மலர் வணக்கம் செலுத்தினார்கள்.

தொடர்ந்து உறுதியேற்புடன் தேசியக்கொடிகள் கையேற்கப்பட, நிகழ்வின் இறுதியாக முள்ளிவாய்க்கால் கோரயுத்த காலத்தில் அங்கே ஏற்பட்டிருந்த உணவுத்தடை காரணமாக அன்றைய காலத்தில் எமது மக்களில் பசி தீர்த்த முள்ளிவாய்க்கால் நினைவுக்கஞ்சியும் வழங்கிவைக்கப்பட்டதுடன், அனைத்து நிகழ்வுகளையும் ”நம்தேசம் தொலைக்காட்சியும், ஐபிசி தொலைக்காட்சியும் நேரலையாக வழங்கிக்கொண்டிருந்தமை நிகழ்வில் கலந்து கொள்ளமுடியாத நிலையில் இருந்தவர்களும் தமது உறவுகளை நினைத்து வணக்கம் செலுத்த ஏதுவாக இருந்தமையும் சிறப்பானதாக அமைந்திருந்தது.

வளாகத்தில அமைந்துள்ள ஆலயங்களில் ஆத்ம சாந்தி பூசை வழிபாடுகளும் நடைபெற்றிருந்தது. மேற்படி அனைத்து நிகழ்வுகளையும். தமிழர் கலைபண்பாட்டு நடுவமும், தமிழீழ மாவீரர் பணிமனையும் இணைந்து சிறப்பாக ஒழுங்கு செய்திருந்தனர். “வீழ்ந்தது அவமானமல்ல, வீழ்ந்து கிடப்பதே அவமானம், மீண்டெழ முயற்சிப்போம்”

# ஒற்றுமையே ஈழத்தமிழர்களின் பலமாகும்
## நாடு கடந்த தமிழீழ அரசாங்க உறுப்பினர் வலியுறுத்து




தமிழர் வரலாற்றில் முக்கிய கூட்டு நினைவாக அமையும், மே 18 துயர் தினத்தை நினைவு கூர்வதும், அஞ்சலி செலுத்துவதும் ஈழத்தமிழர்களின் கட்டாயக் கடமையாகும் என நாடு கடந்த தமிழீழ அரசாங்க உறுப்பினர் நிமால் விநாயகமூர்த்தி தெரிவித்துள்ளார். 14 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் குறித்து வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, பல்லாயிரக்கணக்கான மக்களை, மாவீரர்களை, தமிழர் தேசங்களை இழந்த துயர்தோய்ந்த நாள். ஈழத் தமிழர்களுக்கு எதிராகச் சிங்களம் புரிந்த இனப் படுகொலையின் இரத்த சாட்சியம் இந்த முள்ளிவாய்க்கால்.

நமது மக்கள் வாழ்வே போராகவும், போரே வாழ்வாகவும் வாழ்பவர்கள். எந்த ஒரு நெருக்கடியிலும் எமது விடுதலை வேட்கை குறையாமல் தமிழீழ மண் மீட்பில் தொடர்ந்து பயணித்தவர்கள். இன அழிப்பின் பின்னரும் எமது இறைமையை மீட்பதற்கு உரிமைக்குரல் எழுப்பி வருபவர்கள். தமிழர் தேசத்தின் விடுதலைக்காக ஆகதியானவர்களையும், மக்களையும் மனதில் நிறுத்தி உறுதிபூணும் நாளிது.

எனவே முள்ளிவாய்க்கால் இனவழிப்பில் தம்முயிர் ஈந்தவர்களின் நினைவுடன், தமிழீழ தேசத்தின் விடுதலைக்காகத் தொடர்ந்து ஓயாது உழைப்போம் என உறுதி எடுத்துக் கொள்வோம்" - என்றுள்ளது.

## நேற்று 18.05.2023 மட்டக்களப்பு, கல்லடிக் கடற்கரையில் 14ஆவது ஆண்டு முள்ளிவாய்க்கால் நினைவுதினம் அனுஷ்டிக்கப்பட்டது.



# படுகொலை செய்யப்பட்ட ஈழத் தமிழர்கள்
## மனம் திறக்கும் கனேடிய பிரதமர்..!



இலங்கையில், 14 ஆண்டுகளுக்கு முன்பு முடிவுக்கு வந்த ஆயுதப் போரின் போது ஏற்பட்ட துயர்நிறைந்த உயிரிழப்புக்கள் குறித்து இன்று நாம் ஆழ்ந்து சிந்திக்கின்றோம் என கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, தமிழ் இனப்படுகொலை நினைவேந்தல் நாளை முன்னிட்டு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் மேலும், முள்ளிவாய்க்கால் படுகொலை உட்பட்ட சம்பவங்களில் பல பத்தாயிரம் தமிழர்கள் உயிரிழந்து, மேலும் பலர் காணாமல் ஆக்கப்பட்டார்கள், காயமடைந்தார்கள் அல்லது இடம்பெயர்க்கப்பட்டார்கள்.

அர்த்தமற்ற இந்த வன்முறையால் ஏற்பட்ட வேதனையுடன் வாழும் போரால் பாதிக்கப்பட்டவர்கள், தப்பிப் பிழைத்தோர் மற்றும் அவர்களது அன்புக்குரியோர் ஆகியோரை நாம் இன்று நினைவில் கொள்கின்றோம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# புதிய மாக்சிச லெனின் கட்சியின் ஏற்பாட்டில்
## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்



புதிய மாக்சிச லெனின் கட்சியின் ஏற்பாட்டில் 14ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது. புத்தூர் கலைமதி மக்கள் மண்டபத்தில் மாலை ஆறு மணியளவில் இந்த நிகழ்வு நடத்தப்பட்டுள்ளது.

கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்தில்வேல் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றதுடன் பொதுச் சுடரேற்றி அக வணக்கம் செலுத்தப்பட்டுள்ளது. இதன்போது முள்ளிவாய்க்கால் கஞ்சியும் குறித்த பகுதியில் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் கட்சி ஆதரவாளர்கள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டு இறுதி யுத்தத்தில் உயிர் நீத்தவர்களுக்கு தமது அஞ்சலியை செலுத்தியுள்ளனர்.

# எம் இனத்தின் துக்க தினம் தீவகத்தின் தலைநகர் வேலணையிலும்
## உணர்வுபூர்வமாக அனுஷ்ட்டிக்கப்பட்டது



முள்ளிவாய்க்கால் நினைவு நினைவேந்தல் நிகழ்வு நேற்றைய தினம் வேலணை வங்களாவடி சந்தி நினைவு தூபியில் இடம் பெற்றது. காலை 11 மணியளவில் மலர் தூவி அக வணக்கம் செலுத்தப்பட்டது. பின்னர் மாலை ஐந்து மணியளவில் பொது சுடர் ஏற்றப்பட்டு மலர் தூவி அக வணக்கம் செலுத்தி அதை தொடர்ந்து முள்ளிவாய்க்கால் நினைவுகளை எமது அடுத்த சந்ததிக்கு கடத்தும் முகமாக முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டு, எம் இனத்தின் துக்க தினம் தீவகத்தின் தலைநகர் வேலணையிலும் உணர்வுபூர்வமாக அனுஷிக்கப்பட்டது.

# கிளிநொச்சியில் தமிழ் அரசு கட்சியின்
## முள்ளிவாய்க்கால் நினைவஞ்சலி



தமிழரசுக் கட்சியின் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு கிளிநொச்சியில் இடம்பெற்றது. குறித்த நிகழ்வு நேற்று பிற்பகல் 4 மணியளவில் கிளிநொச்சி டிப்போ சந்தியில் இடம்பெற்றது.

இதன்போது முள்ளிவாய்க்கால் நினைவு போதுச்சுடர் ஏற்றப்பட்டு மலர் மாலையும் அணிவிக்கப்பட்டது. தொடர்ந்து மெழுகுவர்த்தி ஏந்தி அகவணக்கம் இடம்பெற்றதுடன், மலர் அஞ்சலியும் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.